REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

தமிழ் நாட்டுத் திட்டங்களுக்கு ஆபத்து!

ரூபாய் 35·82 கோடியிலிருந்து 30.5 கோடியாக சென்னை மாநில அபிவிருத்தித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறைக்கப்பட்டதன் காரணமாகப் போதிய நிதி வசதியில்லாத காரணத்தினல், எந்தெந்தத் திட்டங்கள் குறைக்கப்படலாம் என்பதுபற்றி நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் திட்டங்கள், செய்தித் தொடர்புத் திட்டங்கள், கிராம மின்சாரத் திட்டங்கள் பாதிக்கப்படலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மலர் 5] சென்னை: மார்கழி 10உ புதன் (25—12—57) ★ ★ வெளியூர்: மார்கழி 11உ வியாழன் (26—12—57) [இதழ் 166

இந்தி திணிக்கப்படுகிறது என்பது

முழு முட்டாள்தனமாம்!

இந்திப் பிரச்சினையைத் தாம்போன்றே பிறரும் அணுக வேண்டுமாம்!

சென்னை 'முன்னேறிய மாநிலம்' என்கிறது நிதிக்குழு

'வளர்ச்சித் திட்ட முதலீட்டுக்கு வழியில்லை' என மறுக்கிறது திட்டக் குழு

இக்கட்டான நிலையில் தமிழகம் அவதியுறுவதா?

'டெல்லி உறவு' தரும் அனுபவம் பற்றி நிதியமைச்சர்

சென்னை, டிச. 25—

"சென்னை மாநிலத்திற்கு அபிவிருத்தித் திட்டங்கள் வேண்டும் என்று வற்புறுத்தி அனுமதி கேட்டால், இங்கு முதலீடு வசதிகள் இல்லை என்று திட்டக்குழு மறுத்துவிடுகிறது. இதன் காரணமாக, சென்னையின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகிறது!

"அதேநேரத்தில் நிதிக்குழு, சென்னை மாநிலம் ஒரு 'முன்னேற்றமடைந்த மாநிலம்' என்பதாக உயர்நிலையைக் கற்பித்து, 'உதவி மானியம்' அளிப்பதற்கும் மறுத்துவிடுகிறது!

"பம்பாய், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களுக்கும் உதவி மானியத்தொகை அளிக்கப்பட்டு வருகிறது. உதவி மானியம் பெற்றுவரும் மாநிலங்களுடன் சேர்ந்த—நிதி வசதி குறைந்த சென்னை மாநிலத்தை, வசதிமிக்க பம்பாய் மாநிலத்துக்கு ஈடான நிலையில்வைத்து எப்படி—எந்த அடிப்படையில் நிர்ணயித்தார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

"முன்னேறியுள்ள மாநிலம் என்னும் பேரால், போலி கௌரவத்துடன் இருக்கும் குறைந்த நிதிவசதியுடன் கூடிய சென்னை மாநிலம், பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிதேட வேண்டிய நிலையில்தான் இன்று உள்ளது.

"இப்படி, சென்னை மாநிலம் முன்னேறிய மாநிலம் என்று நிதிக்குழு கூறுவதாலும், திட்டக்குழு உதவி மானியத் தொகையை சென்னைக்குக் கிடைக்காமல் செய்வதாலும், சென்னை மாநிலத்திற்கு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது"

—என்று, சென்னை மாநிலத் திட்டங்கள்பற்றி, டெல்லியில் திட்டக் குழுவுடன் கலந்து பேசிவிட்டு, சென்னைக்குத் திரும்பியதும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நிருபர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

நெய்வேலித் திட்டத்துடன் இணைக்கப்பட்ட உர உற்பத்தித் தொழிற்சாலைத் திட்டம் இரண்டாவது திட்ட காலத்திலேயே நிறைவேற்றப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் டி. டி. கே. கூறியதை இவரும் உறுதிப்படுத்தினர்.

சென்னை மாநிலத்தின் பெரிய திட்டங்கள் எதிலும் குறைப்பு இராது என்றும், இதர சிறு திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் தாமதம் நிச்சயம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்ப்பாளர் போக்கால் ஒற்றுமை குலைந்துவிடுமென அலறல்!

தென்னக அறிஞர்கள்மீது நேரு கடுந்தாக்குதல்

"தென்னாட்டில் இந்திக்கு எதிர்ப்பு இருந்துவருகிறது. இந்த விஷயத்தில் நாட்டின் பெரியவர்கள்கூட உணர்ச்சி வசப்பட்டுள்ளனர். இந்திப் பிரச்சினையை அவர்கள் இந்த அடிப்படையில் அணுகுவதைக் கண்டு நான் வியப்படைகிறேன். இது இலக்கிய வளர்ச்சியையும் மொழி வளர்ச்சியையும் பாதிக்கும்.

"இவர்களில் ஒரு சிலருக்கு மக்களிடம் செல்வாக்கு இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். நாட்டின் மற்றப் பகுதிகளில் உள்ளவர்கள் இந்தி ஆதரவாளர்களின் கொடிய ஆர்ப்பாட்டத்தைக் கண்டு ஆத்திரப்படலாம்; ஆனால் இந்தச் செய்கை என்னையும் வெறுப்படையச் செய்கிறது.

"தென்னாட்டு மக்கள் விருப்பத்திற்கு மாறாக, ஏதோ கட்டாயமாக இந்தி திணிக்கப்பட முயற்சிகள் நடைபெறுவதாகக் கருத்து பரப்பப்பட்டு வருகிறது; வடநாடு முழுவதும் ஒன்று சேர்ந்து தென்னவர் விருப்பத்திற்கு மாறாக ஏதோ செய்வதாகக் கற்பிக்கப்படுகிறது; இது கலப்பற்ற முட்டாள்தனம்.

"இந்தப் பிரச்சினையை அமைதியாக—நடைமுறைக்கு ஏற்ற அடிப்படையில் அணுகவேண்டும்; ஆனால் குற்றம் சாட்டிப் பேசுவது நிலைமையை மேலும் மோசமாக்கும்.

"நாட்டின் உயிரோட்டமுள்ள பிரச்சினைகளை அணுகுவதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இலக்கியம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கவேண்டியது இன்றைய முக்கிய பிரச்சினையாகும். இந்தியாவின் ஒற்றுமையை நாம் பேணிக் காக்கவேண்டும். பிளவு எண்ணங்களை எதிர்க்கவேண்டும்"

—என்று, பண்டித நேரு, கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ஆட்சி மொழி மாநாடு ஒன்று சென்னையில் நடத்தப்பட்டதும், பல பேரறிஞர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு 'இந்தி' எதிர்ப்புக்கு ஆக்கம் தேடியதும் தெரிந்ததே.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், 'தென்னாட்டின் அறிவாளிகளும், பெரியவர்களும் நாட்டின் ஒற்றுமைக்காக இத்தகைய முக்கிய பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகையில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மொழிப் பிரச்சினை அரசியலுடன் தொடர்புபடுத்தப்படுவதையும், அரசியல் வேற்றுமைகளுக்கு இடமளிப்பதையும் அவர் விரும்பவில்லையாம்; அது மொழிகளின் வளர்ச்சியை பாதிக்குமாம்!

"இந்தியை ஆட்சிமொழியாக்குவதன் நோக்கம், தற்போது அகில இந்திய ஊழியத்தில் ஆங்கில மொழிக்கு உள்ள இடத்தை இந்திக்கு அளிப்பதாகும். இந்தி மொழியில் நல்ல திறமையுள்ளவர்களுக்குத் தனிச் சலுகைகள் கிடைக்கலாம் என்றும் தவறாகக் கருதப்படுகிறது. அகில இந்தியக் காங்கிரஸ் குழு இதைப்பற்றி ஆராய்ந்து சந்தேகத்தை அகற்றி முடிவு செய்துள்ளது.

'இந்தி' இந்தியாவின் மொழியாவது உறுதி; ஆனால் வேலை வாய்ப்புகளை தேடும்போது 'இந்தி' வற்புறுத்தப்படமாட்டாது. ஆனால், வேலைக்காக நடத்தப்படும் பரீட்சைகளில் — அதிலும் இந்திப்பரீட்சையில் தேர்வுபெற்றாலும் இல்லாவிட்டாலும் இந்தியை மத்திய சர்க்காரில் ஊழியம் செய்பவர்கள் கற்கவேண்டும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

"அரசாங்க ஊழியத்திற்கு மொழி ஒரு தடையாக இருக்கக்கூடாது. இந்த மொழிப் பிரச்சினை இந்திக்கும்—ஆங்கிலத்திற்கும் தகராறை உண்டாக்கியுள்ளது. மக்கள் சபைக் குழு பிரச்சினையை ஆராய்வதால், நான் அதைக் குறித்துப் பேச விரும்பவில்லை" என்று குறிப்பிட்டு, இந்தி—ஆங்கிலப் பிரச்சினையை அவர் தட்டிக்கழித்துவிட்டார்.

தவறான பாதையில் சென்று பண்டிதர் மதிப்பிழந்தார்

அல்ஜீரியாவில் அடக்குமுறை!

இரு மகளிருக்கு மரண தண்டனை

அல்ஜியர்ஸ் டிச. 23—

அல்ஜீரியா விடுதலைக்காக மக்கள் நடத்திவரும் கிளர்ச்சி வலுப்பெற்று வருகிறது. இந்த விடுதலை வேட்கையில் பங்கு கொள்பவர்கள் மீது பயங்கர அடக்குமுறைகள் கையாளப்படுகின்றன.

இரு முஸ்லீம் பெண்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நேரத்தில் வெடிக்கும் வெடிகுண்டை, கால்பந்தாட்டத் திடலில் வைப்பதற்கு அவர்கள் உதவி புரிந்தனர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு அவர்களுக்கு இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

காமராசருக்குப் பெரியார் 'கருவேப்பிலை'யானர்

எழும்பூர் பேச்சுக்குப் பிறகும் பெரியாரை சிறையில் வைத்திருப்பது யோக்கியமா?

சென்னை பொதுக்கூட்டத்தில் அண்ணா

சென்னை, 12-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் 21—12—57-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் மற்றொரு பகுதி இங்கு தரப்படுகிறது:—

"'பெரியாரின் விடுதலையை நாம் எப்பொழுது எதிர்பார்க்கலாம்?' என்று இங்கு என்னிடம் ஒருவர் சீட்டு எழுதிக் கேட்டிருக்கிறார். நானும் அதைத்தான் கேட்கிறேன்!

"யாரைக் கேட்பது? நாங்கள் இருவரும் சேர்ந்து காமராசரைத்தான் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டும். ஒருசமயம் அடுத்த தேர்தல்வரையில் விடுதலை செய்யப்படாமலிருக்கலாம்! காமராசருக்கு, தேர்தல்காலம்வரைதான் பெரியார் தேவைப்படுவார்!

"சட்டசபையிலே திரு. வி. கே. இராமசாமி முதலியார், 'மூரளீஸ் கேப்' மறியல்பற்றி ஒரு கேள்வி கொடுத்திருந்தார். கேள்வி கொடுத்திருப்பதாக அவர் என்னிடம் சொன்னபோது, நான் அவரிடம், 'ஏன் இதை நீங்கள் கிளப்புகிறீர்கள்? இதுபற்றிப் பேசுகையில், நீங்கள் ஏதேனும் பெரியாரைத் தாக்கும்வகையிலே பேசினல், பிறகு நானே உங்களை எதிர்க்க நேரிடும்' என்றேன்; உடனே அவர், 'ஐயய்யோ, எனக்குத் தெரியாதே; அப்பொழுதே இப்படித் தெரிந்திருந்தால் கேள்வியே கொடுத்திருக்க மாட்டேனே' என்றார்; அதற்கு நான், 'பரவாயில்லை; நீங்கள் பெரியாரை தாறுமாறாகத் தாக்கக் கூடாது; தாக்காதவகையிலே

(4-ம் பக்கம் பார்க்க)

'தாய் மொழி மூலமே பாடங்கள் கற்றுத் தருக'

இரங்கூன், டிச. 25—

"பள்ளிக்கூடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும், தாய்மொழியிலேயே பாடங்கள் கற்றுத்தரும் நிலை ஏற்பட்டால்தான் கல்வியின் நோக்கம் நிறைவேறியதாகக் கருதமுடியும்" என்று பர்மா பிரதமர் யூ-நு தெரிவித்துள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 25—12—57 புதன்

நாஞ்சில் அழைக்கிறது!

நாஞ்சில் மாவட்டம் நம்மை—கழகத் தோழர்களை அழைக்கிறது.

நாஞ்சில் மாவட்டம் தமிழகத்தின் தென்கோடியில் உள்ளது.

இயற்கைவளம் மிக்கது—காணத்தகு எழிலுடையது

காலஞ்சென்ற கவிஞர் தேசிக விநாயகனார் அவர்களையும், நகைச்சுவை அரசர் கிருட்டிணனையும் தமிழகத்திற்குத் தந்து தனிப்புகழ் பெற்றிருப்பது.

தமிழ் மொழிக்கு 'மனோன்மணீயம்' ஈந்த அறிஞர் சுந்தரனாரைப் பெற்றெடுத்திருப்பது.

தென்னகத்தின் எல்லை என்ற சிறப்புக்குரிய குமரி முனையைக் கொண்டிருப்பது.

அங்கு—நாஞ்சில் நாட்டில் வருகின்ற வெள்ளி, சனிக் கிழமைகளில் நமது கழகத்தின் மாநாடு நடைபெறப் போகின்றது.

கலைவாணர் பந்தலில், அவ்விரண்டு நாட்களிலும் நமது கழகத் தோழர்கள் பல்லாயிரவர் கூடப்போகின்றனர்.

வடவர் ஏகாதிபத்தியத்தை வீழ்த்தி, திராவிடத்தின் விடுதலையைக் காணும் ஒரே குறிக்கோளுடன் தமிழ் மாவீரர்கள் பலர் அங்கு கூட இருக்கின்றனர்.

அம்மாவீரர்களுக்கு வடவர் ஏகாதிபத்தியத்தின் வன்மை குறித்து விளக்கமளிப்பார் மாநாட்டின் தலைவர்.

அந்த ஏகாதிபத்தியத்திடமிருந்து நாம் விடுபடுவதற்கான தேவையையும், வகையினையும் மாநாட்டின் தலைவர் தெளிவுபடுத்துவார்.

தாயக விடுதலைக்காக நாம் கண்டிப்பாகத் தந்தாகவேண்டிய விலை உயர்ந்த காணிக்கைகளையும் சுட்டிக்காட்டுவார்-தலைவர்.

நாஞ்சில் மாவட்டம், மற்றத் தமிழக மாவட்டங்களைவிட கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் பகுதியாகும். அங்கு நடத்தப்பெறும மாநாட்டிற்குத தலைவராக இருந்து, நாம் விடுபடும் மார்க்கம் கூற இளவல் சம்பத் அவர்களே எல்லாவகையிலும் தகுதி பெற்றிருப்பவராவார் எனக் கூறுவது மிகையன்று.

தங்கள் பகுதியில் நடைபெறும் மாநாடடிற்கு அவரை, தலைவராகத் தேர்ந்தெடுததிருப்பது,மாநாட்டின் வரவேற்பாளர் நண்பர் மனோகரன் அவர்களின் தெரிந்து செயல்படும திறததை மெய்ப்பிப்பதாகும்.

இளவல் சம்பத், மக்கள்சபை உறுப்பினராக இருந்து புதிய அனுபவம் பெற்றுத் திகழ்கிறார்.

நமது கழகத்தின் பணி குறித்து வடவர் கொண்டுள்ள மனப்போக்கு எத்தகையது என்பதை, அவர்களுடன் நெருங்கிப் பழகி, தெரிந்து கொண்டுள்ளார், அவர்.

வடவர் வாழ்க்கை முறைக்கும் தென்னவர் வாழ்க்கை முறைக்கும் இருந்துவரும் பிளவை, முரண்பாட்டை அவர் தினம் தினம் பயின்று வருகிறார்.

அண்மையில், மக்கள்சபையில் அவர் எழுப்பிய முதல்குரல் மக்கள் சபையில் அதுவரை என்றும் கண்டறியாத புதியதோர் சிந்தனைப் பாதையையே திறந்துவிட்டிருக்கிறது என, மாற்றாரே மதிப்பிட்டுக் கூறுகின்றனர் என்றால், மாநாட்டில் அவர் மேலும் பல மீட்சியுறும் வழிவகைகளைக் கூறாமலா இருப்பார்?

மாநாட்டைத் துவக்கிவைக்கும் நண்பர் டாக்டர் அருணாசலம் அவர்கள் பெயர், பலருக்குப் புதிதாக ஒலிப்பதாக இருக்கக்கூடும். அவரும், பலருக்கு அறிமுகம் ஆகாதவர்தான்.

இருந்தாலும், கழக இலட்சியத்தில் அசைக்கமுடியாத பற்றுடையவர் டாக்டர் அருணாசலம். இதுவரை அவர் ஆற்றி வந்த இயக்கப் பணி, பகட்டான விளம்பரப் பிடிப்பில் சிக்காது இருந்துவந்தது. அவர் ஈடுபட்டுள்ள மருத்துவப் பணி அத்தகையது.

டாக்டர் அருணாசலம் கற்றவர்—கருத்துவளம் கொண்டவர். விசையொடிந்து கிடக்கும் திராவிடத்திற்கு விசையூட்டும் மார்க்கங்களை, அவர் மாநாட்டினருககு வாரி வழங்குவர் என்பதில் ஐயமில்லை.

இரண்டுநாள் மாநாட்டிலும் கழக முன்னணி வீரர்கள் பலர், சாமி அரங்கிலிருந்து கருத்து விருந்து அளிப்பர். செந்தமிழ் முழங்கும்.

மாநாடு கூடுகின்ற காலம் கருதத்தக்கது.

இந்தி மொழியினை, பேரரசின் ஆட்சிமொழி என்ற போர்வையில் திராவிட மக்கள் மீது திணிக்கும் பணி தீவிரமாக நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

அதற்குக் கடுகளவும் குறைந்திடாத அளவில், எதிர்ப்பு அணியும் தீவிரமாக வலுப்பெற்றுவருகிறது.

எதிர்ப்பு அணி, உருவத்திலும் வன்மையிலும் பெருகிக் கொண்டு வருகிறது.

நேற்றுவரை தனது செவிலித்தாய்களாகவும், உற்ற துணைவர்களாகவும் இருந்து வந்த பல பெரியவர்கள், இன்று தனது கொடும்பகைவர்களாக மாறிவருவதை, இந்தி மொழி கண்டு வருகிறது.

எனவே, இநதித் திணிபபின் போக்கும், இநதி எதிர்ப்பின் தன்மையும் இந்த நிலையில் இருந்துவருகிறது.

இது பற்றி சீர்தூக்கிப் பார்த்து, தக்கது செய்ய நாஞ்சில் மாநாடு நமக்கெல்லாம அரியதோர் வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

மற்றொன்று, நமது கருத்தைக் கவர்ந்து நிற்கிறது. அதாவது, பெரியாரின் சிறைவாசமும், அவர்வழி இயங்கும பல ஊழியர்களின் சிறைவாசமும், நமமால் ஆராய்ந்து முடிவு கட்டத்தக்கது.

இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் பண்பற்ற பேச்சை, நாவடக்கமற்ற தன்மையைக் குறித்து நமது கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டிய பொறுபபு, நாஞ்சில் மாநாட்டிற்கு உண்டு.

மாநாட்டில் முதல்நாள் இரவு, கோவிந்தராச பாகவதர், தனது தீந்தமிழிசையால் மாநாட்டினரை மகிழ்விககப் போகிறார்.

இரண்டாம் நாள் இரவு சென்னை தோழமை நாடக மனறத்தார் நாடக விருந்தளிககப போகினறனர். அவர்களுடைய 'மனித இதயம்' நமமுடைய இதயத்தோடு இணைந்து இயங்குகிறதா அல்லது பிணைந்து செயல்படுகிறதா என்பதை நாம உணர்ந்துகொள்ளலாம்.

மாநாட்டின் இரண்டு நாட்களிலும நாகூர்-அனீபாவின இன்னிசை உண்டு. சோர்ந்த உள்ளத்தையும் முறுக்கேற்றும ஆற்றல் அவா இசைக்கு உண்டு என்பதை அனைவரும அறிவா.

இரண்டு நாள் மாநாட்டிலும் குறை மறைந்து குணம் மிகுந்திருக்கும் என்பதற்கு, நண்பர் மனோகரன் நம்மனைவரையும் வரவேற்று உபசரிககும பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என்ற ஒன்றே போதும. அவர் தலைமையில அமைந்துள்ள வரவேற்புக் குழுவில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு தோழரும் சிறந்த செயலவீரராவர்.

நாஞ்சில் சார்பில் நண்பர் மனோகரன் அவர்கள் நமக்கெல்லாம அன்பழைப்பு விடுக்கிறார். மாநாடு வெற்றி நமது இலட்சிய வெற்றி ஆகும்

திராவிடநாடு திராவிடருக்கே!

உர உற்பத்தித் திட்டங்கள்

நிறைவேற்றப்படும்

மத்திய நிதி அமைச்சர் வாக்குறுதி

புதுடில்லி, டிச. 24—

இந்தியப் பேரரசின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் திட்டம் குறைக்கப்படும் என்றும், உர உற்பத்தித் திட்டங்களையும் கைவிடவேண்டியிருக்கும் என்றும் கூறப்பட்டது தெரிந்ததே.

வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் வடக்கே இருக்கும்போது, தமிழகத்தில் நெய்வேலித் திட்டத்திலுள்ள உர உற்பத்தித் திட்டமும் கைவிடப்படும் என்று கூறப்பட்டதற்கு எதிராக மக்கள் குரலெழுப்பியதை உணர்ந்த மத்திய நிதி அமைச்சர், இப்போது, மக்களை திருப்திப்படுத்த முயன்றுள்ளார்.

இரசாயன உர உற்பத்தித் திட்டங்களைக் கைவிட வேண்டும் என்று முன்பு கருதப்பட்டதாம்; ஆனால் அதைப்போன்ற நிலை இப்போது இல்லை என்று அவர் அறிவித்துள்ளார்.

1958—59-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்போது இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படுமாம்.

கோரிக்கை நாள்!

சென்னை, டிச. 23—

வரும் சனவரித் திங்கள் 4-ம் நாள் தமிழ்நாடு என். ஜி. ஓ-வினர், 'கோரிக்கை நாள்' ஒன்று கொண்டாட முடிவு செய்துள்ளனர். இந்த முடிவு, தீர்மானத்தின் மூலம மததிய நிர்வாகக் குழுவில எடுக்கப்பட்டுள்ளது.

புதிய எண்ணெய்

ஆலைகளுக்கு அனுமதி மறுப்பு

புதுடில்லி, டிச. 22—

நாட்டில் தற்போது மொத்தம 3,000 எண்ணெய் ஆலைகள் இருக்கின்றன என்றும, ஆண்டுக்கு 63,00,000 டன் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது என்றும, இதன் காரணமாக மேற்கொண்டு புதிய எண்ணெய் ஆலைகள் ஆரமபிக்க அனுமதி தரப்படமாட்டாது என்றும மத்திய வர்த்தக அமைச்சர் இலாகா அறிவித்துள்ளது.

ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கை

பாராளுமன்றக் குழு பரிசீலிக்காதாம்

புதுடில்லி, டிச. 29—

ஆட்சி மொழிக் கமிஷன் அறிக்கையை, பாராளுமன்றக் கூட்டுக் குழு, வரும் ஜனவரியில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது, மாநிலங்களுக்கிடையில் தொடர்புகொள்ளும் மொழியாக இந்தியைக் கொண்டுவருவது பற்றி திட்டமான முடிவு எதுவும் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும், இந்த விவகாரம், 1960-ம் ஆண்டில் நியமிக்கப்படுகிற ஆட்சி மொழிக் குழுவின் பரிசீலனைக்குப் பிறகே முடிவு செய்யப்பட முடியும் என்றும் டெல்லி அதிகார வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறதாம்!

சிலர், 'இந்தியை, யூனியன் சர்க்காரின் ஆட்சி மொழியாக ஆக்கவே கூடாது; ஆங்கிலத்தையே நீடித்து வைத்துக்கொள்ள வேண்டும்' என்று தெரிவிக்கிற கருத்துக்களை, பாராளுமன்றக் குழுவினர், பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ளமாட்டார்களாம்!

ஏனெனில், ஆங்கிலமே நீடிக்க வேண்டும் என்றால், அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்; இதனைப் பாராளுமன்றமே செய்ய முடியும் என்றும் குழுவினர் கருதுகின்றனராம்!

'இந்தியைப் பரப்புவதில் கட்டாயம் கூடாது'

என். ஜி ஓ.-வினர் எச்சரிக்கை!

சென்னை, டிச. 23—

"சென்னை மாநிலத்தில் இந்தியைப் பரப்பும் விஷயத்தில் கட்டாயம் கூடாது" என்று தமிழ்நாடு என். ஜி. ஓ-வினர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

"சென்னை மாநிலத்தில் இந்தியைப் பரப்புவதில் கட்டாயம் கூடாது; நேரடியாகவோ, மறைமுகமாகவோ திணிக்கவும் கூடாது; மத்திய அரசாங்க வேலை வாய்ப்புகளுக்கும், உயர் பதவி அளிப்பதிலும் இந்தி படிப்பு கூடாது; மத்திய அரசாங்கம் வெளியிடும் தாள்களில் வட்டார மொழியும் இடம் பெற வேண்டும்" என்று, நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் காணப்பட்டுள்ளது.

சஞ்சீவரெட்டி சந்தேகிக்கிறார்!

"ஆங்கிலத்தின் இடத்தை இந்தி நிரப்ப முடியுமா? அதிலும், தென்னாட்டில், குறுகிய எதிர்காலத்தில் முடியுமா என்பது எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது"

என்று ஆந்திர முதல்வர் சஞ்சீவரெட்டி, உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

உற்பத்தி மும்முரமாம்!

புதுடில்லி, டிச. 24—

1956 மார்ச் மாதம் வரை, 1,080 உத்தியோகப் பெயர்களுக்கு சரியான இந்திச் சொற்கள் பற்றி முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்! அதுபோல், 4 000 நிர்வாகத் துறைச் சொற்களுக்கும், பல்வேறு காரியாலயங்கள் சம்பந்தமான 14 500 சொற்களுக்கும் சரியான இந்திச் சொற்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம்!

1957 அக்டோபர் வரை, இலாகாக்கள் சம்பந்தப்பட்ட 44,471 இந்திச் சொற்களை நிபுணர் குழு பரிசீலித்து அங்கீகரித்திருக்கிறதாம்.

இந்திச் சொற்களை உருவாக்கும் வேலை இன்னும் மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறதென்றும், 1960-ம் ஆண்டில் அவ்வேலை முடியுமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும் மக்கள் சபையில் கூறப்பட்டிருக்கிறது.

ஆங்கிலோ — இந்தியர் புறக்கணிக்கப்படும் கொடுமை

பிராங் அந்தோணி கண்டனம்

புதுடில்லி, டிச. 23—

"அரசியல் சட்டத்தில், ஆங்கிலோ—இந்தியருக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறப்பட்டுள்ளது; ஆனால் நடைமுறையில், பொறுப்பற்ற அதிகாரிகளின் போக்கு அதற்கு நேர்மாறாக உள்ளது.

"வேலை வாய்ப்புகள் தேடி ஆங்கிலோ—இந்தியர் செய்து கொண்ட மனுக்கள் பற்றியும், அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்ட புள்ளி விவரங்களையும் தருவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. சிறுபான்மையினருக்கு அரசாங்கம் தக்க பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்டது" என்று மக்கள் சபையில், பிராங்க் அந்தோணி குற்றம் சாட்டினார்.

"போதிய அளவுக்கு ஆங்கிலோ—இந்தியர் கிடைக்கவில்லை என்று கூறுவது உண்மை கலப்பற்ற பொய்யாகும்; இது, ஆங்கிலோ-இந்தியர் சமூகத்தை இழிவுபடுத்துவதாகும்" என்று அவர் மேலும் சாடினார்.

விவாதத்திற்குப் பதிலளிக்கையில உள்விவகார துணை அமைச்சர் திருமதி வயலட் ஆல்வா, இரயில்வே இலாகாவில் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு 1947 ஆகஸ்டு 15-ந் தேதிக்கு முன்னா இருந்த நிலையை நீடிக்கச் செய்வதில் மத்திய அரசு அக்கறை எடுத்துக்கொண்டு 1957 பிப்ரவரி முதல் ஆங்கிலோ-இந்தியர் வகுப்புக்கு வேலை வாய்ப்புகளை ஒதுக்கியுள்ளது என்று கூறினார்.

பெண்களிடம் கண்ணியக் குறைவாக நடப்போர்

தண்டிப்பதற்கு மசோதா

புதுடில்லி, டிச. 21—

"பெண்களிடம் கண்ணியக் குறைவாக நடந்துகொள்ளும் ஆண்களுக்கு 15 ஆண்டு சிறைத் தண்டனை அல்லது ரூ. 10,000 அபராதம் விதிக்க வேண்டும்" என்று கோரும் தனி நபர் மசோதா ஒன்றை மக்கள் சபையில், மசோதா திரு இராதாராமன் என்பவர் கொண்டுவந்தார்.

உழைத்து வாழும் பெண்களுக்கு ளின் நேரிடும் இக்கட்டுகளையும், ஓய்வு ஊதியம் பெறப்போகும் பெண்களுக்கு ஏற்படும் இன்னல்களையும், பஸ், இரயில் நிலையங்களில் பெண்களுக் ஏற்படும் இடையூறுகளையும், பொது இடங்களில் மாதர் படும் வேதனைகளையும் அம்மசோதாவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனைவியிருக்க மறுமணம் செய்பவர்கள்மீது...!

புதுடில்லி, டிச. 23—

கட்டிய மனைவி உயிருடனிருக்கையில் வேறு மணம் செய்து கொள்ளுவதற்குத் தடையிருப்பது தெரிந்ததே; ஆனால் பாதிக்கப்பட்டவர்கள், நீதிமன்றத்தில் தான் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது; இதனால் வீண்செலவு ஏற்படுகிறது என்று காரணம் காட்டி, மக்கள் சபையில், திருமதி சுபத்ரா ஜோஷி என்பவர் திருத்த மொன்று கொண்டுவந்தார்; அதன்படி, பாதிக்கப்பட்டவர்கள் தரும தகவலின்மீது போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

அறிவியக்கத்தின் சிறந்த தொண்டர்

அறிவும், பண்பும், அஞ்சாநெஞ்சமும் கொண்டவர்

கொள்கைகளிலிருந்து சிறிதும் வழுவாத உண்மை ஊழியர்

தோழர் அ. பொன்னம்பலனருக்குப் பாராட்டு

சென்னை, டிச. 20—

மலாயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்குச் சென்று அங்கு நம் கொள்கையைப் பிரச்சாரம் செய்துவிட்டு அண்மையில் தாயகம் திரும்பிய தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கட்கு, 17-12-57 மாலை சிறப்பான பாராட்டு அளிக்கப்பட்டது.

சென்னை 9-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி பாராட்டுக் கூட்டம் ஏழு கிணற்றுத் தெருவில் மாலை 6-30 மணிக்கு தோழர்கள் நாகூர் அனீபா, சேலம் சீனிவாசன் ஆகியோரின் இன்னிசையுடன் துவங்கியது.

கூட்டத்திற்குத் தோழர் ஏ. எஸ். இராமன் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் இரா நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ., தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எம்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்கினர்.

தோழர் ஏ. எஸ். இராமன் அவர்கள் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :—

"தோழர் பொன்னம்பலனர் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக திராவிட இயக்கத்திற்கும் சுயமரியாதை இயக்கத்துக்கும் அரும் பாடுபட்டவர்; அப்பொழுதெல்லாம் தோழர் பொன்னம்பலனர் கலந்துகொள்ளாத நமது மாநாடோ, பொதுக்கூட்டமோ கிடையாதென்றுகூறலாம். அவர் பல எதிர்ப்புகளுக்கும், இடையூறுகளுக்குமிடையே சமுதாயச் சீர்திருத்தத் தொண்டு புரிந்தவர்."

என். வி. நடராசன்

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தோழர் பொன்னம்பலனருடைய பொதுவாழ்வு பல இடுக்கண்களுக்கிடையே துவக்கப்பட்டு வளர்ந்து வந்திருக்கிறது. இன்று அதன் பலனாக நம் சமுதாயத்துக்குப் பல நன்மைகள் கிடைத்துள்ளன. நீதிக் கட்சியிலிருந்த போது அவர், பெரியாரவர்களுடன் நிழல்போல இருந்து, நாகம்மையார், எப்படி பெரியாருக்குப் பணி செய்வார்களோ அதே போல பணியாற்றி, பெரியாரின் உடல் நலத்தை மிக அக்கறையுடன் கவனித்து வந்தவர்; அதன் பிறகு திராவிடர் கழகத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத்திலும் அவரது தொண்டு தொடர்ந்து வளர்ந்து வந்திருக்கிறது.

"சாதிகள் ஒழியவேண்டும்; 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்கிற தன்மானக் கொள்கைக்கு—சுயமரியாதை இயக்கத்துக்குக் கடல் கடந்தும் புகழைத் தேடி வந்திருக்கிறார்."

சத்தியவாணிமுத்து

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் தம் பாராட்டுரையில் கூறியதாவது :—

"சுயமரியாதை இயக்க ஆரம்ப காலத்தில் பொன்னம்பலனர் போன்றவர்கள் தெளிவான கருத்துக்களை விளக்கமாக எடுத்துக் கூறியதன் விளைவாகத்தான் மக்கள் அதை நன்றாகப் புரிந்து கொண்டு இயக்கம் இன்று இந்த அளவு வளர முடிந்தது; அந்தக் காலத்தில் — வசதிகள் மிகக் குறைந்த அந்தக் காலத்தில் பட்டி தொட்டிகளெல்லாம் சென்று கல்லடியும், சொல்லடியும் பெற்று கருத்துப் பிரசாரம்புரிந்தவர்களில் நமது பொன்னம்பலனரும் ஒருவர்; மறைந்த மாவீரர் அழகிரிசாமி போன்றவர்களுடன் இருந்து பணியாற்றியவர்; இவர் இன்று தி. மு. கழகத்தின் சிறந்த தொண்டராக மலாயா சென்று திரும்பி வந்திருக்கிறார்.

"அரசாங்கத்தார் பல நாடுகளுக்குத் தூதுவர்களை அனுப்பி வைப்பார்கள்; அப்படி அனுப்புவதனல் பணம்தான் செலவழியுமே தவிர, காரியம் ஒன்றும் ஆகாது; ஆனல் நமது பொன்னம்பலனரோ, தி. மு. கழகத்தின் தூதுவராக மலாயா சென்று நல்ல பலனுள்ள காரியங்களைச் செய்து வந்திருக்கிறார். இவருடைய பிரசாரம் மலாயாவில் நல்ல பலனைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

"ஆண்டில் முதியவராக இருப்பினும் உள்ளத்தில் இளைஞராக இருக்கும் திரு. பொன்னம்பலனர் அவர்கள் 1000 மைல்களுக்கப்பால் கடல் கடந்து சென்று தீவிரப் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறார் என்றால், அவரை நாம் பாராட்டாமலிருக்க முடியாது.

"திராவிடநாடு கோரிக்கையை ஆந்திரம் ஆதரிக்கிறதா, கேரளம் கேட்டதா என்று கேட்பவர்களுக்குப் பதில் தரும் வகையில், இங்கு மட்டுமல்ல—மலேயா நாடும் நமது பிரச்சினையை ஆதரிக்கிறது என்பதைக் காட்டும் முறையிலே பொன்னம்பலனர் அவர்களுக்கு அங்கு நல்ல வரவேற்பும், உபசரிப்பும் கிடைத்திருக்கிறது என்பதையறிந்து நாமெல்லாம் பெருமைப் படுகிறோம். தாய்க்குலத்தின் சார்பிலே திரு. பொன்னம்பலனர் அவர்களைப் பாராட்டி வரவேற்கிறேன்."

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் மகளிர் மன்றச் சார்பில் மாலை அணிவித்தார்கள்.

க. அன்பழகன்

அடுத்து, தோழர் க. அன்பழகன் அவர்கள், தனது சார்பில் தோழர் பொன்னம்பலனர் அவர்களுக்கு மாலையணிவித்துவிட்டுப் பாராட்டுகையில் கூறியதாவது:-

"தோழர் பொன்னம்பலனர் அவர்களுக்கு இதுமட்டுமல்ல—இன்னும் எத்தனையோ பாராட்டுக்கள் காத்திருக்கின்றன. பொதுவாக, பெரியோர்களைப் பாராட்டுவது என்பதெல்லாம் நாமும் அவர்களைப் போன்ற பெருமை பெறவேண்டும்—அவர்களுடைய பண்புகளைப் பெற வேண்டும் என்றுதான் பொருள்.

"இன்று மலாயாவில் மட்டுமல்ல—சுயமரியாதை இயக்கம் பரவ தமிழ் மக்கள் வாழும் தரணியெல்லாம், 'தென்னாடுடைய சிவனே போற்றி; என்னாட்டுக்கும் இறைவா போற்றி' என்பது போல, 'தென்னாடுடைய சு. ம. இயக்கமே போற்றி; என்னாட்டுக்கும் வழிகாட்டுவாய் போற்றி' எனக் கூறும் அளவுக்கு எல்லோருக்கும் வழிகாட்டிய பெரியோர்களில் நம் பொன்னம்பலனரும் ஒருவர்.

"இன்று பெரியார் பாராட்டப் படுகிறார் என்றால், பொன்னம்பலனருக்கும் அதில் பங்குண்டு. சுயமரியாதை இயக்கத்துக்கு ஒரு பெரிய தூண்போல இருந்தவர் இவர். அன்பும் பண்பும் மிகுதியாக உள்ள பொன்னம்பலனர் அவர்களை, அவரைவிடக் குறைந்த வயதினராக உள்ள நாம், பொதுவாகப் பெரியார் என்றே அழைக்க வேண்டும். தொண்டில் பெரியவர் அவர்; அவரை நமது மூத்த அண்ணு என்றுகூட அழைக்கலாம்.

"நம் இயக்கத்திலுள்ள எல்லோரையும்விட அவர் தைரியசாலி—வீரநெஞ்சம்கொண்டவர்; துணிவோடு எதையும் செய்யக் கூடியவர். நான் ஏழு-எட்டு வயதுச் சிறுவனாக இருந்தகாலம் முதல் தோழர் பொன்னம்பலனரை அறிவேன்.

"நெக்குவிடாத பாறையில் சுயமரியாதை இயக்கம் வேர்விட வழி வகுத்துத் தந்தவர்; பாறை போன்ற மனம்படைத்த மக்களிடையே சுயமரியாதைக் கொள்கையை இறுத்தியவர். அவரோடு உடனிருந்து அந்தக் காலத்தில் பணியாற்றியவர்களெல்லோரும் மிக்க வீரர்களாகவே இருந்திருக்கின்றனர். காலஞ்சென்ற மாயவரம் நடராசன், நாகை மணி சௌந்தரபாண்டியன் முதலியவர்களும், மற்றும் தோழர்கள் எஸ். இராமநாதன், எஸ். வி. லிங்கம் ஆகியோரெல்லாம் பொன்னம்பலனரின் உடன் தோழர்களாவர்.

"தோழர் பொன்னம்பலனர் அவர்கள், கொள்கையை எந்த கோத்திலும் இம்மியளவும் விட்டுக் கொடுக்காதவராவர். அவர் அண்ணு அவர்களுக்கு உற்ற துணையாக இன்று இருப்பவர்.

"அடியார் பரம்பரையைப் போல இன்று நம் இயக்கத்துக்குப் பணியாற்றுபவர். இவர் ஒரு காலத்தில் சைவசீலராகக் காட்சியளித்தவர்தான். பல சைவ சமய நூல்களையும் நன்கு படித்தவர் பல சைவப் புலவர்களுக்குத் தெரியாதவைகள் கூட இவருக்குத் தெரியும்.

"உடல்நல வளர்ச்சியையும் நன்கு பாதுகாத்துவருபவர் இவர்; அதனல்தான் இன்று இவ்வளவு வயது ஆகியும் நம்மையெல்லாம் விட உடற்கட்டிலும், உள்ளத் துணிச்சலிலும் இளமையுடனிருக்கிறார்.

"குழந்தைகளிடத்தும் நமது பொன்னம்பலனர் அவர்களுக்கு அளவுகடந்த அன்பு உண்டு. அவர், குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவதைக் கண்டவர்கள் இதை நன்கு அறிவர். அவருடைய உள்ளப்பாங்கு நமக்கும் வர வேண்டும் என்று ஒவ்வொருவரும் விரும்பவேண்டும்.

"நாடு அவரைவிடப் பெரியது என்பதால், நாம் நம் கடமையைச் செய்ய—இயக்கத்துக்கும், நம் எண்ணத்துக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கும் அவரைப் பாராட்டுவதும் நம கடமை.

"அண்ணு அவர்களுடைய மூளைத் திறனும், நமது பொதுச் செயலாளரைப் போன்ற பொறுமையும் எனக்கு இல்லையே என்று நான் சில வேளைகளில் நினைப்பதுண்டு; அதேபோல, நமது பொன்னம்பலனர் போன்ற சுறுசுறுப்பும் எல்லோருக்கும் தேவை

"வாழ்க அவர் பல்லாண்டு—வளர்க அவர் தொண்டு என்று கூறி, நம் நாட்டை நமக்கு மீட்டுத் தருக என அவரை வேண்டி, என் உரையை முடிக்கிறேன்"

பொன்னம்பலனர்

தோழர் பொன்னம்பலனர் அவர்கள் தனக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, மலாயாவில் தான் கண்ட காட்சிகளையும், அங்குள்ள தமிழ் நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளையும் வர்ணித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரபூர்வமான தூதுவனாக மலாயாவுக்குச் செல்லவில்லையென்றாலும், அங்கு நான் கலந்துகொண்ட எல்லாக் கூட்டங்களிலும் நமது கழகக்கருத்துக்களையே பரப்பினேன். மலாயாவில் வாழும் தமிழர்களிடையே கட்சி வேறுபாட்டையே காண முடியவில்லை. தி.க., தி.மு.க., அகில மலாயா தமிழர் சங்கம், இன்னும் இப்படிப்பட்ட பல்வேறு அமைப்புகள் சார்பில் எனக்கு வரவேற்புகள் அளிக்கப்பட்டன. அங்கு குறிப்பாக திராவிடர் கழக —தி. மு. கழகத் தோழர்களிடையே இங்குள்ளதைப்போல பகைமை இல்லை; இரு சாராரும அன்புடனும், ஒற்றுமையுடனும் பழகிவருகிறார்கள்.

"நமது அண்ணு அவர்களையும், மற்றும் நம் இயக்கத் தலைவர்களையும் காண மலாயா வாழ் தமிழர்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். அண்ணு அவர்களையும் மற்றவர்களையும் மலாயாவுக்குக் கூடிய விரைவில் வருமாறு செய்வேன் என்று உறுதியளித்துவிட்டு வந்திருக்கிறேன்.

"அந்த நாட்டில், நமது கழக ஏடுகளான 'திராவிட நாடு', 'போர்வாள்' ஆகிய இரண்டிற்கும் தடையிருந்துவருகிறது. இத்தடையை நீக்க வேண்டுமென்று நான் அங்குள்ள சட்டசபை உறுப்பினர்களிடம் கேட்டேன்; அவர்களும் ஆவனசெய்வதாகக் கூறியிருக்கிறார்கள்.

"மலாயா வாழ் தமிழர்கள் நிறைய சம்பாதிக்கிறார்கள்; ஆனல் வருமானத்தைப்போலவே செலவும் அதிகமாகச் செய்கிறார்கள். தீயவழிகளிலெல்லாம் செலவாவதற்கு அங்கு ஏராளமான வழிகளிருக்கின்றன 'பணத்தைக் கெட்ட வழிகளில் செலவிடாதீர்கள்—சேமித்துவையுங்கள்; உடல் நலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்; மலாயா நாட்டுக் குடிமக்களாகவே ஆகிவிடுங்கள்; அப்பொழுதுதான் உங்களுக்கும் எல்லா உரிமைகளும் கிடைக்கும்' என்று நான் அவர்களுக்குப் பல முறை வற்புறுத்தியிருக்கிறேன்."

இரா. நெடுஞ்செழியன்

இறுதியாகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துவிட்டுப் பேசுகையில், வாழ்ந்த பரம்பரை இன்று வீழ்ந்துபட்டதன் விளைவாகவே மலாயாவிலும், இலங்கையிலும் கூலிகளாகத் தமிழர்கள் வேலைசெய்து பிழைக்க வேண்டியிருக்கிறது என்றும், வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி ஏற்பட்டால்—திராவிடம் தனியாட்சியானல், மலாயா இரப்பர் தோட்டங்களிலும், இலங்கை தேயிலைத் தோட்டதிலும், இன்னும் பர்மா—நேட்டால்—மடகாஸ்கரிலும் கூலிகளாக அவதிப்படும் மக்களை நாம் தாயகத்துக்கு மீட்டு, அவர்களுக்கு நல்வாழ்வு தரமுடியுமென்றும் குறிப்பிட்டார்கள்.

"சுவர்ணம் விளையும் நாட்டிலே சோற்றுக்கு வழியின்றி, வாழ்விழந்து, முறிச்சீட்டிலே கையெழுத்திட்டுக் கொடுத்து விட்டு, நாகை, தூத்துக்குடி, சென்னை துறைமுகங்கள் வழியாக தென்னுப்பிரிக்காவுக்கும், கெட்டாலுக்கும், மடகாஸ்கருக்கும், மலாயா, இலங்கை, பர்மா போன்ற நாடுகளுக்கும் கூலிப் பட்டாளங்களாகச் சென்றவர்களின் ஒரு பகுதியினரைக் கண்டு விட்டு வந்த விவரத்தைத்தான் பொன்னம்பலனர் அவர்கள் இங்கு நமக்கு எடுத்துச் சொன்னர்.

"இன்னும் பல பகுதியினர் பல நாடுகளிலே கேவலமான நிலையில் வாழ்கின்றனர். மூன்றாண்டுகளுக்குமுன் நான் இலங்கை சென்றிருந்த போது கொழும்பு நகரத்திலே 'கக்கூசு' எடுப்பவர்களெல்லாம் தமிழர்களாக இருந்ததைக் கண்டேன்; இந்த இழிநிலை தமிழர்களுக்கு ஏன் வந்தது?

சேர — சோழ — பாண்டியர்கள் இமயத்திலே வெற்றிக்கொடி பொறித்து வந்தார்கள்; இன்னும் கடாரம்—யவனம் — சாவகம் இலங்கை முதலிய கடல்கடந்த நாடுகளையெல்லாம் வென்றார்கள் என்பதை நம் வரலாறு எடுத்துக் காட்டுகிறது.

"இன்றும் நம் தமிழர்கள் கடல்கடந்து செல்கிறார்கள்; ஆனல் வெற்றிக்கொடி நாட்ட அல்ல—வயிற்றைக் கழுவிக்கொள்ளுவதற்காகக் கூலிகளாகச் செல்கின்றனர். வடநாட்டுக்காரனும் செல்கிறான்; ஆனல், கூலியாக அல்ல—வட்டிக்கடைவைக்க! பஞ்சாப்காரன் செல்கிறான் —போர்வீரனுக! தமிழன் தான் வெளிநாடுகளிலும் தாழ்ந்த நிலையில் வாழ்கிறான்.

"இந்த இழிநிலைகளையெல்லாம் போக்க, திராவிடம் தனிச் சுதந்தர நாடாக ஆனல்தான் முடியும் என்பதையுணர்ந்து வீழ்ச்சியுற்ற திராவிடத்தில் எழுச்சி வேண்டும் என்ற உணர்வுடன் அனைவரும் பணியாற்றவேண்டுகிறேன்."

தோழர் பொன்னம்பலனர் அவர்களுக்கு 9-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் ஓர் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

சேலம் வழக்கு நிதிக்காக பொதுச்செயலாளர் அவர்களிடம் 9-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் ரூ. 51 அளிக்கப்பட்டது.

ரூ. 1,000 நோட்டு!

புதுடில்லி, டிச. 23—

"இந்திய அரசாங்க பாங்கியும், பம்பாய் மாநிலத்திலுள்ள ஐதராபாத் பாங்கியும், ரூ. 1,000 மதிப்புள்ள நோட்டுகளை ஏற்க மறுக்கின்றனவா?" என்று மக்கள் சபையில் கேள்வி ஒன்று கேட்டபோது மத்திய நிதி அமைச்சர் டி. டி. கே., 'இதுவரையில் யாரும் ரூ. 1,000 நோட்டுகளை இந்த பாங்கிகளில் கொண்டு வந்ததில்லை' என்று பதிலளித்துள்ளார்.

பழைமையாகி விட்டது!

திருவனந்தபுரம், டிச. 22—

"சட்டமன்றத்தில் பிறரை, 'மதிப்புக்குரிய' 'கனம்'ஐயா(சார்) என்ற அடைமொழிச் சொற்களுடன் அழைக்கப்பட்டு வருவது இந்தக் காலத்திற்கு ஏற்றதல்ல" என்று கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாத் தெரிவித்துள்ளார்.

'அதைத் தக்கமுறையில் ஆராய்ந்து, அவசியமான மாற்றங்களை சட்டமன்றத் தலைவர்கள் செய்யவேண்டும்" என்றும் அவர் யோசனை கூறியுள்ளார்.

கிரிமினல் குற்றத்தின்கீழ் கைது செய்யப்பட்ட லோகியா விடுதலை!

இலட்சுமணபுரி, டிச. 23—

அரசாங்க ஊழியர்கள், வேலை செய்வதைத் தடுக்க முயன்றதாக டாக்டர் ராம் மனேகர் லோகியா கடந்த நவம்பர் 2-ம் நாள் கிரிமினல் திருத்தச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார். அவர் மீது கிரிமினல் திருத்தச் சட்டத்தின்கீழ் குற்றம் சாட்டப் பட்டது.

இன்று அவர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு

ஆச்சாரியார் வேண்டுகோள்

கொழும்பு, டிச. 22—

"தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் உள்ள தகராறினைத் தீர்க்கவும், சிக்கல்களை மறக்கவும் ஆங்கிலமே இலங்கை அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்,, என்று ஆச்சாரியார், இலங்கைக்கு யோசனை கூறியுள்ளார்.

சென்னை பொதுக்கூட்டத்தில் அண்ணா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பேசுங்கள்' என்றேன். அவரும் பேசினார்; பெரியாரைக் குறிப்பிட்டு அவர் பேசும்போது, வழக்கமாக எனக்கு எதிர்ப்புறத்திலே அமர்ந்திருக்கிற காமராசர் அவனைப் பார்த்து, தன் முகத்திலே கொஞ்சம் புன்னகையை வரவழைத்துக் கொண்டு—கொஞ்சம் குறும்புத்தனமாக—'உங்கள் பெரியாரைப்பற்றிப் பேசுகிறார் பாருங்கள்' என்றார்; அதற்கு நான் "அது என்ன, 'உங்கள் பெரியார்' என்கிறீர்கள்; தேர்தல் முடிந்து 2 மாதந்தான் ஆகிறது; அதற்குள் அவர், எங்கள் பெரியார் ஆகிவிட்டாரா?" என்று கேட்டுவிட்டு, "எங்கள் பெரியார் என்றும் சொல்லவேண்டாம்; உங்கள் பெரியார் என்றும் சொல்லவேண்டாம்; 'நம் பெரியார்' என்று வேண்டுமானால் சொல்லுங்கள்" என்றேன் "இல்லை, இல்லை; 'உங்கள் பெரியார்தான்' என்று அவர் மீண்டும் சொன்னார்.

"வாசனை தரும்வரைதான் கருவேப்பிலை சாம்பாருக்கு; அதன் பிறகு அது குப்பையில்தான் எறியப்படும்!

"அப்படித்தான் காமராசரும் பெரியாரைப் பயன்படுத்திக்கொள்கிறார். அதைக்கூட நான் சொல்லக்கூடாது; காமராசருக்கு எதிராக நான் பேசுவதாகப் பெரியார் சொல்லக்கூடும்!

"காமராசருக்கு எந்தவிதக் கெடுதலும் விளைவிக்காமல் நாங்கள் நடந்துகொள்வோம் என பெரியாருக்கு நான் உத்தரவாதம் தருகிறேன்; காமராசரை நாங்கள் ஒருபோதும் கவிழ்த்துவிடமாட்டோம்.

"ஆனால், காமராசர் சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்சி நடக்கும் என்ற நிலைமை ஏற்பட்டால் தான் பெரியாரை விடுதலை செய்யமுடியும்; 'நாடு கிளர்ச்சியில்—கொந்தளிப்பில் இறங்கிவிட்டது; மந்திரிகள் நாட்டில் உலவமுடியவில்லை' என்று நாம் காட்டினால் தான் பெரியாரை விடுவிப்பார்கள்; 'கருப்புக்கொடி காட்டுவார்களே' என்ற அச்சமேற்பட்டால் தான் விடுதலை செய்வார்கள்.

"நானும் பெரியாரும்—நான் 'ஆரிய மாயை' என்ற நூல் எழுதியதற்காகவும், பெரியார் 'பொன்மொழி' என்ற நூலை எழுதியதற்காகவும்—தண்டிக்கப்பட்டு இருவரும் ஒன்றாக திருச்சி சிறையிலே வைக்கப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம்—(எனக்கும் பெரியாருக்குமுள்ள 15 ஆண்டுத் தொடர்பில் நான் இல்லாமல் பெரியார் மட்டும் தனித்து சிறைக்குச் சென்றிருப்பது இதுதான் முதல்தடவை)—திருச்சி சிறையிலே நானும் அவரும் பக்கத்துப் பக்கத்து அறைகளிலேதான் வைக்கப்பட்டோம்; அப்படியிருந்தும், 10 தினங்களுக்குமேல் நானும் அவரும் ஒருவருக்கொருவர் பேசாமலேயே இருந்தோம். அப்பொழுது வெளியிலே உள்ளவர்கள், 'இவர்கள் இருவரும் சிறையிலிருந்து வெளியே வரும்போது ஒன்றாகச் சேர்ந்துதான் வருவார்கள்' என்றுதான் நினைத்தார்கள்; அப்படித்தான் ஆசைப்பட்டார்கள்.

"அப்பொழுது சிறையிலிருந்த—கொலை செய்துவிட்டு ஆயுள் தண்டனைபெற்ற கைதி ஒருவன் எங்கள் இருவருக்கும் தேவைப்பட்ட வேலைகளையெல்லாம் அன்புடன் செய்தான்; அடிக்கடி அவன் என்னிடம்வந்து, 'என்ன அண்ணா, பெரியார் உங்களுடன் பேசினாரா; நீங்கள் அவருடன் பேசினீர்களா?' என்று ஆவலுடன் கேட்பான்; அதேபோலவே பெரியாரிடமும் அக்கைதி சென்று, 'அண்ணாவிடம் பேசினீர்களா ஐயா; அண்ணா உங்களுடன் பேசினாரா?' என்றெல்லாம் விசாரிப்பான். அவனுக்கு இருந்த ஒரே ஒரு ஆசையெல்லாம், நாங்கள் இருவரும் எப்படியாவது பேசிக்கொள்ளச் செய்துவிட வேண்டுமென்பதுதான்.

'இன்னும் சிலர், 'ஆண்டவனே அவர்கள் இருவரும் பேசாமலிருப்பதால்தானே நமக்கு பிழைப்பு! அவர்கள் பேசாமலிருக்கும்படிச் செய்துவிடு' என்று பகவானை வேண்டிக்கொண்டவர்களும் உண்டு!

"அதே நிலைதான் இன்றும்! எங்களுக்குப் பயப்பட்டால்—பயப்படுபவர்களுக்குச் சொல்லுவேன்—எங்களால், எந்த வகையிலும் குறைந்துவிடாது உங்கள் இராஜ்யம்; உங்கள் இராஜ்யம் உங்களுடையதாகத்தானிருக்கும்; அண்ணாதுரை, படையெடுத்துக் கொண்டுவந்து அழித்துவிடமாட்டான்; நான் இருந்து பரிபாலித்துப் பார்த்து, விட்டு விட்டு வந்ததுதான் அந்த — உங்கள் இராஜ்யம்!

"நாங்கள் அன்று திருச்சி சிறையிலே இருந்தபோது, கிளர்ச்சி நடந்து, ஊரே கொந்தளித்ததால்தான் எங்களை உள்ளேயிருந்து வெளியே அனுப்பினார்கள். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல, பெரியாரோடு இருந்ததால்தான் எனக்கும் விடுதலை கிடைத்தது என்று வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள்; எனக்கு மதிப்புத் தர வேண்டாம்; உண்மையில், கிளர்ச்சி காரணமாகத்தான் எங்களை விட்டார்கள்.

"அதே அளவு கிளர்ச்சி நடத்தும் சக்தி நம்மிடம் இருக்கிறது. 'பொங்கி எழும் சக்தியைத் தடுக்கிறீர்கள்; அனுமதி தாருங்கள் அண்ணா' என்று கூட இங்கு பாட்டுப் பாடினார்கள். நான் என்ன செய்ய முடியும்? பெரியார் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாரே! எனவே, நாம் கிளர்ச்சி நடத்துவதற்கில்லை. கிளர்ச்சி நடப்பதைக்கூட சந்தேகப்படக்கூடியவர்களாயிற்றே, தி.க. தோழர்கள்!

"பிடிக்காத மாமியார் கைபட்டால் குற்றம்—கால்பட்டால் குற்றம்—என்பதுபோல, நம் செய்கையிலே அவர்கள் சந்தேகப்படுபவர்களாயிற்றே!

"ஒரு வீட்டுக் குழந்தை, தெருவிலே வந்து வண்டிகள் போகும் பாதையிலே நின்றுகொண்டிருப்பதை ஒருவன் பார்த்து, அதைத் தூக்கிக்கொண்டுபோய் வீட்டுக்குள்ளிருந்த குழந்தையின் தாயாரிடம் குழந்தையை ஒப்படைத்தால், எதற்கும் சந்தேகப்படக் கூடியவனவன், 'நீ யார்?' என்று அவனைப் பார்த்துக் கேட்டால் என்ன அர்த்தம்?

"'குழந்தையைத் தூக்கிக்கொண்டுவரும் சாக்கில் வீட்டுக்குள்ளே நுழைந்து என் மனைவியிடம் பேசலாம் என பார்க்கிறாயா?' என்று கேட்டால் என்ன பொருள்? அடுத்த நாள் முதல், குழந்தை தெருவிலே நிற்பதைக்கண்டால், அவன், தெருவிலிருந்தபடியே, 'அம்மா, குழந்தை தெருவிலே நிற்கிறது; தூக்கிப்போங்கள்' என்றுதானே கூறிவிட்டுப் போய்விடுவான்?

"அதேபோல, 'காமராசரைக் கவிழ்த்துவிடுவோம்' என்று பெரியார் நம்மை சந்தேகிக்கிறார். நாமும் வெளியிலிருந்து கொண்டேதான் சொல்லமுடியும்.

"இந்த நாட்டை ஆளும் சர்க்காருக்கு இன்னொன்றும் சொல்லிக்கொள்வேன்—'பார்ப்பனர்களைக் கொல்லவேண்டும்; குத்தவேண்டும் என்று நான் சொன்னதெல்லாம் இப்பொழுது செய்யச் சொல்லவில்லை; அதற்கென இன்னொரு நாள் வைப்பேன்' என்று பெரியார், கடைசி நாள் — தீர்ப்பு வழங்குவதற்கு முன்னால் கூறினார். அப்படி அவர் கூறிவிட்ட பிறகு—தெளிவாகத் திட்டவட்டமாக அவர் சொல்லிவிட்ட பிறகு அவரை விடுவித்திருக்க வேண்டும்.

"'பத்து பார்ப்பனரைக் கொல்லுவதாலோ, அக்கிரகாரத்துக்குத் தீ வைப்பதாலோ சாதி ஒழியாது; அதையெல்லாம் நான் இப்பொழுது செய்யச் சொல்லவில்லை' என்று பெரியார் பேசினார்; அதைத்தான் இந்த ஏழை அண்ணாதுரை சொன்னபோது, 'ஈயம், பித்தளை' என்றெல்லாம் கிண்டல் செய்தார்கள்!

"பெரியார், 'பலாத்காரம் செய்வது என் நோக்கமல்ல' என்று வெளிப்படையாக—பட்டவர்த்தனமாக — திட்டவட்டமாகச் சொல்லிய பிறகும், அவரை உள்ளே வைத்திருப்பது ஒரு சர்க்காருக்கு யோக்கியமில்லை; 'பத்துப் பேரை கொல்லத்தான் சொன்னேன்' என்று அவர் சொன்னால் உள்ளே வைத்திருக்கலாம்.

"மனிதத்தன்மையுடன் நடந்து கொள்ளும் சர்க்காராயிருந்தால், பெரியாரின் எழும்பூர் பேச்சை ஆதாரமாக வைத்துக்கொண்டு, பெரியாரையும் அவருடைய கழகத்தைச் சேர்ந்த மற்ற தோழர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும்.

"கிளர்ச்சி செய்துதான் விடுவிக்க வேண்டுமென்றால் என் கை கட்டுண்டு கிடக்கிறதே!

"காமராசர் நல்லவர்; நாடாள வந்தவர்; பெரியாருக்கு வேண்டியவர்; தேர்தல் காலத்திலே ஓடோடி அவருக்காகப் பெரியார் உழைத்தார்; காமராசர் நல்ல மனமுடையவராயிருந்தால் அவரை இதற்குள் விடுதலை செய்திருக்கவேண்டுமே! பெரியார் அப்படிப் பேசிய பிறகும், அவரைச் சிறையிலேதான் வைத்திருக்கவேண்டுமென்றால், காமராசருடைய யோக்கியதையைக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"அதேபோல, பண்டித நேருவும் இதுவரை தனக்கு இருந்த நல்ல பெயரை—புகழை, பெரியாரைத் திட்டியதன் மூலம் இழந்துவிட்டார் என்றுதான் சொல்வேன்.

"அவர், பெரியாரை, 'பைத்தியம்' என்று சொல்லிவிட்டால், பெரியார் பைத்தியமாகிவிடமாட்டார். பெரியாரைப் பற்றி என்னுடைய நெஞ்சமும், மற்ற எல்லோருடைய நெஞ்சமும் அன்றி பல நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள பண்டித நேரு உணர முடியாது.

"அவர் உள்ளபடியே, பெரியாரை உணர்ந்து இதைச் சொல்லவில்லை. கூடயிருந்தவர்கள் கலகமூட்டியிருக்கிறார்கள். யாராலே, யார் மூட்டிவிட்ட கலகத்தினாலே அவர் அப்படிப் பேசினார் என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் யார் என்பதை நான் அறிவேன்; யூகிக்கக்கூடியவர்கள் அறிந்துகொள்ள முடியும்.

"பெரியார் இப்படிப் பேசுகிறார்—அப்படிப் பேசுகிறார் என்றெல்லாம் நேருவிடம் எடுத்துச் சொல்லியிருப்பார்கள்; 'என்ன அப்படிப் பேசுகிறார்' என்று நேரு கேட்டிருப்பார்; 'பார்ப்பனரைக் குத்தச் சொல்லுகிறார்; கொலை செய்யச் சொல்லுகிறார்; ஊரே கொந்தளிக்கிறது' என்று சொல்லியிருப்பார்கள்; உடனே அவர், 'பெரியார் என்ன, பைத்தியம் போலிருக்கிறது; ஏன் இப்படியெல்லாம் அவர் பேச வேண்டும்?' என்று நேரு கூறியிருப்பார்; உடனே இவர்கள், 'இதை அப்படியே பொதுக்கூட்டத்தில் சொல்லிவிடுங்கள்' என்று கேட்டுக்கொண்டிருப்பார்கள்; அவரும், கூட்டத்தில் பேசுகையில் 'பெரியாருக்குப் பைத்தியம்' என்று கூறியிருப்பார்; அவ்வளவுதான்!

"யாரோ சொல்லியதைக் கேட்டுக்கொண்டு இப்படிச் சொல்லிவிடுவது பெரிய மனிதருக்கு அழகல்ல! நேரு தன் திறமையைக் காட்ட இந்த இடத்தில் தவறிவிட்டார்—மதிப்பை இழந்துவிட்டார் என்றுதான் சொல்லுவேன்."

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

டிச. 26 : மாலை—வீரவநல்லூர்
இரவு—மேலப்பாளையம்
27, 28 : நாகர்கோவில்—
மாநாடு
29 : நாகர்கோவில்—
பொதுக்குழுக் கூட்டம்
30 : மாலை—சமயபுரம்
இரவு—கல்லக்குடி

மதுரைத் தமிழ்ச் சங்க 56-வது ஆண்டு விழா

"28—12—57 மாலை 3 மணிக்கு மதுரை தமிழ்ச் சங்க மன்றத்தில் மேற்படி விழா உயர்நீதிபதி வி சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்; அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்" என, செயலாளர் வி சண்முகசுந்தரம் அறிவிக்கிறார்.

என். ஜி. ஓ.-வினர்

கோரிக்கை பற்றி நிதி அமைச்சர்

சென்னை, டிச 25—

மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ரூ 5 அளிக்கப்பட்டுள்ளது, சென்னை அரசாங்கத்திற்கு 'தலைவலி'யை உண்டாக்கியிருக்கிறதாம்!

அபிவிருத்தித் திட்டங்களைக் குறைப்பதா, அல்லது நெருக்கடியை ஈடுசெய்ய என். ஜி ஓ-க்களுக்கு இடைக்கால நிவாரணம் அளிப்பதா என்பது பற்றி ஆராய்ந்து, அரசாங்கம் முடிவு செய்யுமாம்.

திட்டக்குழுவுடன் கலந்து பேச டெல்லி சென்று திரும்பிய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் நிருபர்களிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

சந்திர மண்டலத்திற்கு ரஷ்யர்கள் சென்றனரா?

ஸ்டட்கார்ட், டிச. 25—

ஏற்கனவே ரஷ்யர்கள் சந்திர மண்டலத்தை அடைந்துவிட்டனரென்றும், அதுபற்றிய தகவலை வெளியிட தக்க சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டுள்ளனரென்றும் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

மேற்கு ஜெர்மனியில் இராணுவ பொருளாதார ஏடு இதை வெளியிட்டுள்ளது.

கல்கத்தா மெயில் விபத்து

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, டிச. 25—

கல்கத்தா மெயிலுக்கு ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

விசாரணை நடைபெற்று வருகிறதென்றும், இந்த விபத்திற்கு அரசியல் நோக்கம் உண்டா என்று இப்போது கூறுவதற்கில்லையென்றும், மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உலக அமைதி

உடன்பாடு மூலம் இயலாது என்கிறார் பண்டிதர்

சாந்திநிகேதன், டிச. 24—

"வெறும் உடன்பாடுகளின் மூலம் உலக அமைதியை நிலைநாட்ட முடியாது. பலாத்கார எண்ணத்தைக் கைவிட்டு, நட்புறவு கொள்வதே உலக அமைதிக்கு நல்ல வழியாகும்" என்று பண்டித நேரு அகில பாரத ஆண்டுவிழாவில் தெரிவித்தார்.

லண்டன், டிச. 24—

'டெலிவிஷன் டெலஸ்கோப்' எனும் தொலைநோக்கி கருவி ஒன்றை ரஷ்யா கண்டுபிடித்துள்ளதாம். இதைக்கொண்டு 50 நிழற் படங்கள் எடுக்கப்பட்டுள்ளதாம்.

மாதம் ரூ. 100 முதல் ரூ. 300 வரை

சம்பாதிக்கலாம்

எங்கள் ஸ்தாபனத்தில் தமிழில் தபால் மூலம் குறைந்த செலவில் ஹோமியோபதி படித்து டாக்டர் ஆகுங்கள். ஏழைகளுக்குக் கட்டண சலுகை உண்டு

விபரத்திற்கு எழுதுங்கள் :—

பாண்டியன் ஹோமியோபதிக் இன்ஸ்டிடியூட்,
21, வெள்ளியம்பலம் தெரு,
மதுரை (தமிழ் நாடு).

அச்சுறுத்தும் நடவடிக்கையா?

எகிப்து பிரதமர் அறிவிப்பு

நியூயார்க், டிச. 24—

'நாட்டோ' மாநாட்டின் முடிவுகளின்படி கடுந்தர ரகமுள்ள ராக்கெட் குண்டுகளை ஐரோப்பாவில் பரவலாக வைப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாம்.

இது எகிப்தை பயமுறுத்தும் நடவடிக்கை' என்று எகிப்து பிரதமர் நாசர் தெரிவித்துள்ளார்.

க்ஷயரோகத் தடுப்பு

தமிழ்நாட்டில் 1 கோடிபேர் பரிசோதிக்கப்படுவர்

சென்னை, டிச. 24—

இரண்டாவது திட்ட காலத்தில், தமிழ்நாட்டில், ஒரு வயதிலிருந்து 25 வயதுக்கு உட்பட்டவர்களில் 100 இலட்சம் பேர்களைச் சோதித்து, அவசியமானவர்களுக்கு பி சி. ஜி. ஊசி போட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 1957-58-ல் சேலம் மாவட்டத்திலும், தென்னார்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் இந்த வேலை நடக்கும்.

மேட்டூர் கால்வாய் வசதி

சர்க்கார் குறிப்பு

சென்னை, டிச. 24—

மேட்டூர் கால்வாய் அமைப்பில் வலது, இடதுபுறக் கால்வாய்களை 15—1—1958-வரை பாசனத்துக்குத் திறந்து வைக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

சேலம், கோவை மாவட்டங்களில் முறையே 18,000; 27,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் அளிக்கும் இந்தக் கால்வாய்கள், சாதாரணமாக டிசம்பர் 15-ந் தேதிவரைதான் பாசனத்துக்குத் திறந்துவிடப்பட்டிருப்பது வழக்கம். தற்போதைய சலுகை இனி வரும் ஆண்டுகளுக்கும் கிடைக்குமென எதிர்பார்க்கக் கூடாது என்று அரசாங்கம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

குடியரசுத் தலைவரைக் கொல்லச் சதி

ஜகார்த்தா, டிச. 25—

சென்ற தினங்களில் இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் சுகர்ணோவை கொல்லுவதற்குச் சதி செய்து குண்டுகள் வீசப்பட்டதன் சம்பந்தமாக இதுவரையில் 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்; மேலும் பலர் தலைமறைவாக உள்ளனராம்.

அரசாங்கத்தைக் கவிழ்த்து, அமைச்சர்களைக் கொல்லுவதற்கு சதி உருவாக்கப்பட்டிருந்ததாம். 'தாருல் இஸ்லாம்' என்ற இயக்கத்தினருக்கும் இதில் பங்குண்டு என்று இராணுவ அதிகாரியொருவர் அறிவித்தாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.